**OS.No.276/2024, Dated 03.07.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 3rd day of July 2025.

**வா.சா.1 -கனகராஜ் த/பெ. கோதண்டராமன் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் ஒப்பந்த விவசாயம் செய்து வருகிறேன். நான் ராகவேந்திரா எர்பல்ஸ் என்ற நர்சரி நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால் சரிதான். நான் அந்த நர்சரி தோட்டம் தொடர்பாக விளம்பரம் செய்வதற்கு நோட்டிஸ் எதாவது விநியோகித்திருந்தேனா என்றால் இல்லை. எனது மொபைல் எண் 8438018809 என்னுடையதா என்றால அதை நான இரண்டு வருடங்களுக்கு முன்பு உபயோகப்படுத்தினேன். அதன பின்னிட்டு அந்த மொபைல் தொலைந்துவிட்டது. எனக்கு பிரதிவாதியை எப்படி தெரியும் என்றால் தொழில் சம்பந்தமாக ஆத்தூர் செல்லும் போது எனக்கு பழக்கம் ஆகும். நான் பிரதிவாதிக்கு எந்த அடிப்படையில் பணம் கொடுத்தேன் என்றால் அவருடைய பூர்வீக பிரச்சணைக்காக துணி வியாபாரம் செய்வதாக அவர் கூறியதாலும், ஏற்கனவே அவருக்கு நான் சிறு தொகை கடன் கொடுத்து பெற்றிருந்ததாலும் அதன் அடிப்படையில் கொடுத்தேன். பிரதிவாதியை எனக்கு 2019ம் ஆண்டிலிருந்து தெரியும். பிரதிவாதிக்கு நான் ரூ.8,00,000/- கடன் கொடுத்துள்ளேன். எந்த தேதயில் கொடுத்தேன் என்றால் 21.08.2021 அன்று ஆவணி மாதம் 5ம் தேதியான அன்று கொடுத்தேன். நான் அந்த தொகையை வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேனா அல்லது கையிலிருந்து கொடுத்தேனா என்றால் கையிலிருந்து தான் கொடுத்தேன். அந்த கடனுறுதி சீட்டில் சேட்டு மற்றும் இந்திரன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பம் செய்தனர். அவர்கள் இருவரும் என்னுடைய உறவினர்களா என்றால் இல்லை. எனக்கு பழக்கம். சாட்சிகள் இருவருமே திருவண்ணமாலை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் தான். நான் ரூ.8,00,000/- பிரதிவாதிக்கு வந்தவாசியில் வைத்து தான கடன் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தபோது அவர் மட்டும் தான் வந்திருந்தார். தாவாவில் குறிப்பிட்டுள்ளபடி பிரதிவாதி கையிருப்பாக ரூ.15,00,000/- வைத்துள்ளார் என்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருவண்ணாமலை மாவட்டம், நமத்தோடு கிராமத்தை சேர்ந்த சடையன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் என்னிடம் அவர் பணிபுரிந்தார். எனக்கு பெரணமல்லூர் பாரத ஸ்டேட் வங்கியல் கணக்கு எண் உள்ளது என்றால் சரிதான். அதன் கணக்கு எண் 40281911865 என்றால் சரிதான். இந்த வங்கி கணக்கு எண்ணிற்கு பிரதிவாதி

ரூ.3,00,000/- வரை பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் ஏற்கனவே அவர் பணம் வாங்கியிருந்ததால் அதை அவர் வங்கி மூலமாக திருப்பி கொடுத்தார். நானும், சடையன் என்பவரும் பிரதிவாதியிடம் ரொக்கமாக ரூ.5,00,000/- பெற்றோம் என்றால் இல்லை. கடந்த 08.11.2022 அன்று பிரதிவாதி வீட்டிற்கு நான் சென்று கடனை கொடுத்துவிடுவதாக கூறினேன் என்றால் இல்லை. நான் பிரதிவாதியிடம் செய்யாறில் வைத்து பணத்தை கொடுத்து விடுகிறேன் என்று பிரதிவாதியை செய்யாறுக்கு அழைத்தேன் என்றால் இல்லை. 08.11.2022 அன்று பிரதிவாதி செய்யாறு வந்தபோது அவரை தகாத வார்த்தைகளில் திட்டி அடித்தேன் என்றால் இல்லை. இந்த சம்பவம் தொடர்பாக பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் ஆத்தூர ் ஊரக காவல ் நிலையத்திலிருந்து என்னை விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் எனக்கு அன்றைய தினம் பல போன்கள் வந்தது. அது அந்த காவல ் நிலையத்திலிருந்து வந்ததா என்று என்னால ் உறுதி செய்ய இயலவில்லை. பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண்.510/ 2022 வழங்கப்பட்டது என்றால் எனக்கு அது தெரியாது. பிரதிவாதி செய்யாறு காவல் நிலையத்தில் 15.11.2022 அன்று ஒரு புகார் கொடுத்தாரா என்றால் அவர் புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. ஆனால் என்னை அழைத்து விசாரித்தார்கள். அந்த புகாரின ் பேரிலும ் மனு ரசீது எண்.483/2022 வழங்கப்பட்டது என்றால் எனக்கு அது தெரியாது. பிரதிவாதி சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு பிரதிவாதி சேலம் மாவட்டம், குற்றவயில் நீதித்துறை நடுவர் எண்.6 நீதிமன்றத்தில் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிய வேண்டும் என்று பிரிவு 156(3) ன் கீழ் மனு செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த மனுவின் மீது சேலம் மாவட்ட குற்ற பிரிவு போலீசார் முதல் தகவல் அறிக்கை எண்.16/2023 என்ற வழக்கை பிரிவுகள் 120-பி, 420, 294(பி), 323, 324, 506(ii), 307 இ.த.ச. படியும் 4 of TNPHW Act படியும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்ட விபரம் தெரியாது. மாவட்ட கண்காணிப்பாளர ் அலுவலகத்தில ் கையொப்பம ் மட்டும ் வாங்கினார்கள். கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் வட்டத்திலுள்ள கொங்கு பைனான்ஸ் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி கொங்கு பைனான்ஸில் எனக்கு ஆதரவாக கொடுத்த கடனுறுதி சீட்டை தான் நான் வாங்கி வந்து மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கொங்கு பைனான்ஸில் இருந்த பிரதிவாதியின் கடனுறுதி சீட்டை எடுத்து வந்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்ததால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.07.03 05:48:26 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.